# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– திருமதி. ஆர். சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 2 | நாள் :16.06.2026 | |
| அசல் வழக்கு எண். | 14/2023 | | |
| பெயர் | பாஸ்கர் | த/பெ | வசவன் |
| வயது | 57 | தொழில் | ஐஸ் கம்பெனி |
| கிராமம் | கூறைநாடு | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு திருமதி. எஸ். லலிதா, இருக்கை எழுத்தர் நிலை –1 என்பவரால் உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் ஐந்தாம் பிரதிவாதி. நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பில் சான்றாவணங்கள் தாக்கல செய்யவில்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி என் உடன் ஐந்தாவதாக பிறந்தவர். என் குடும்ப சொத்துக்கள் அனைத்தும் என் தந்தை வசவன் செட்டியார் தான் வாங்கினார் என்றால் சரிதான். என் தந்தை இறப்பிற்கு பிறகு என் தாய் சொத்துக்களை பார்த்து வந்தார் அவருடன் நானும் சேர்ந்து கவனித்து வந்தேன். என் அப்பா இறந்தபிறகு என் அம்மா எனக்கு எந்த சொத்தும் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. குடும்ப சொத்தை பொதுவாகத்தான அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பொது குடும்ப சொத்தில் வாதி அனுபவம் செய்து வருகிறாரா என்றால் இல்லை. வாதிக்கு குடும்ப சொத்தில் பங்கு கொடுப்பதில் ஆட்சேபணை உள்ளதா என்றால் நான் குடியிருக்கும் சொத்தை தவிர வேறு சொத்தில் பாகம் கொடுக்க ஆட்சேபணை இல்லை. நான் குடியிருக்கும் சொத்து பொது சொத்தா என்றால் பொதுசொத்து தான்.

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.